# சங்க அகப்பாடல்களில் தாய்மை

# Sanga Agapadalgalil Thaimai

*கி. ச. புனிதவதி*
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
காஞ்சி மாமுனிவர் அரசினர் பட்ட
மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
புதுச்சேரி

**K.S. Punidavathi**
*Research Scholar, Department of Tamil*
*Kanchi Mamunivar Government Institute for Post Graduate Studies and Research*
*Puducherry*

## ஆய்வுச் சுருக்கம்

*சங்க அகப்பாடல்களில் தலைவன் தலைவியின் இன்ப வாழ்க்கை குடும்பம், சமூகம் சார்ந்து அமைக்கப்பட்டுள்ளது. நற்றாய் செவிலி இருவரின் உணர்வுகள் வெளிப்படும் கூற்று எங்கெல்லாம் நிகழ வேண்டும் என்பதைத் தொல்காப்பியர் சுட்டிச் செல்கிறார். தலைவி மட்டுமே அவர்களின் உலகமாக உள்ளது. அவர்கள் தலைவன் தலைவி இருவரிடம் நேரடியாகக் கூற்று நிகழ்த்துவது இல்லை. களவில் இற்செறிப்பு நிகழ்த்தும் போது தோழி தாயைப் பழித்துரைக்கிறாள். தலைவி தலைவனுடன் உடன்போக்கு சென்ற போது தாயின் மனஉணர்வு அச்சம் மிகுந்ததாக அமைகிறது. தலைவன் தலைவியின் களவு வாழ்க்கைக் கற்பாக மாறும் போது இனிமையுடையதாய் மாறுகிறது. தாய் உள்ளங்கள் தவிப்பிற்குள்ளாகின்றன. அவர்களின் மனம் தலைவியின் இல்வாழ்க்கையானது சிறப்புடன் அமைய வேண்டும் என்ற முனைப்பிலே முகிழ்த்திருக்கின்றது. இல்லறம் நல்லறமாக மாறுவதற்கு தலைவி ஆற்றும் சிறப்புகளையும் தலைவன் உசாத்துணையாக இருப்பதைக் கண்டு மகிழ்வும் கொள்கின்றனர். சங்க அகப்பாடல்களில் வெளிப்படும் தாய்மையின் உள்ளம் தூய்மை உடையது என்பதை இக்கட்டுரை எடுத்துரைக்கின்றது.*

## Abstract

*In Sangam literary anthologies the pleasant life of the leader is set depending on the family and community. Tolkappier points out where the claim that the feelings of the two mothers are expressed should take place. The leader is their only world. They do not make direct statements to the leader or the leader. The friend retaliates when the thief steals it. Their emotional fears set in when the leader went to compromise. It becomes tasty when the leader becomes a thief to the leader. Thai souls suffer. Their mind should be set on the life of the leader is happy with the initiative. They are happy to see the leader's accomplishments and the leader's accompaniment to make the home better. This article shows that the heart of Sangam motherhood is pure.*

***முக்கியச் சொற்கள்:***

*தொல்காப்பியம், சங்க அகப்பாடல்கள், நற்றாய் கூற்று, செவிலி கூற்று, இல்வாழ்க்கை, இன்பம்*

***Keywords:***

*Tolkappier, Sangam Literary, Marriage, Pleasure, Two Mothers*

**Citation**

Punidavathi, KS. “Sanga Agapadalgalil Thaimai.” *Journal of Tamil Culture and Literature*, vol. 1, no. 4, 2022, pp. 1–8.

**முன்னுரை**

***ஆயிரம் மைல் பயணம் முதல் மைலைக் கடப்பதில் தான் துவங்குகிறது - மோசேதுங்.***

*சங்க இலக்கியம் தமிழர் வாழ்வியல் கூறுகளை எடுத்துரைக்கும் களஞ்சியம் ஆகும். தலைவன், தலைவி, தோழி, நற்றாய், செவிலி, கண்டோர் எனக் கூற்று நிகழ்த்துவோர் பலர் உள்ளனர். தலைவன் தலைவியின் களவு, கற்பு வாழ்க்கைக்கு ''இன்பம்'' அடிப்படையாகிறது. அதை அடைவதற்கான வழிகள் ஏதம் மிகுந்ததாகவும் அமைந்துள்ளது. தலைவனுடன் தலைவி களவில் இன்பம் துய்த்ததால் உடலில் ஏற்பட்ட மாற்றத்தைக் கண்டும், உடன்போக்குச் சென்ற போது அடைந்த தன் துன்பத்தையும், பின் தலைவன் இல்லில் மகிழ்ந்திருக்கும் காட்சியில் மகிழ்ந்தும் இருக்கக்கூடிய நற்றாய் செவிலித்தாயின் உளப்பாங்கினை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

**மகள் மனம்**

*சங்க இலக்கியங்களில் தலைவிக்காகத் தோழியின் பங்கு இன்றியமையாதாக அமைகின்றது. தலைவிக்காக அவள் எடுத்துக்கொள்ளும் மன உணர்வினை இங்கு நாம் ஆராயலாம். தலைவி தினைப் புனம் காக்க சென்ற போது தலைவனுடன் ஏற்பட்ட அன்பொழுக்கத்தால் அவள் உடலில் மாற்றம் ஏற்படுகிறது. இது வேலனால் ஏற்பட்டதோ என்று எண்ணி அன்னை வெறியாட்டு நிகழ்த்துகிறாள். அப்பொழுதும் தீராத வேளையில், தலைவி இற்செறிக்கப் பெறுகிறாள். தலைவன் பகற்குறி, இரவுக்குறி என வந்து செல்கிறான். வரைவு பற்றி நினைக்கவில்லை. ஒரு நாள் இரவுக்குறி வந்தபோது தோழியானவள், தலைவியிடம் உரைப்பாளாய் கூறுகிறாள். தலைவனைக் காணாது தடுத்து இற்செறிக்கும் நம் தாய் பெண்கொலைப் புரிந்த நன்னன் போல நரகத்தில் உழன்று துன்பப்பட வேண்டும் என்கிறாள். பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்லு என்பர். அதற்கிணங்க, தலைவன், தலைவியின் அன்பிற்கு இடையீடாகத் தாய் வந்தாலும் அவளும் துன்புறுதல் வேண்டும் என்று கூறுகிறாள்.*

***மண்ணிய சென்ற வொண்ணுத லரிவை***
***புனறரு பசுங்காய் தின்றதன் றப்பற்***
***கொன்பதிற் றொன்பது களிற்றொ டவணிறை***
***பொன்செய் பாவை கொடுப்பவுங் கொள்ளான்***
***பெண்கொலை புரிந்த நன்னன் போல***
***வரையா நிரையத்துச் செலீஇயரோ வன்னை***
***ஒருநாள், நகைமுக விருந்தினன் வந்தெனப்***
***பகைமுக வூரிற் றுஞ்சலோ விலளே (குறுந்.292)***

*தோழி இவ்வாறு தாய் துன்புற வேண்டும் என நினைத்தாலும், தாயானவள் தான் ஈன்ற மகள் இன்பமுடன் வாழ வேண்டும் என்று நினைப்பவள். அவ்வாறு இற்செறிக்கப்பட்ட போதும் தலைவி தலைவனுடன் உடன்போக்குச் சென்றுவிட்ட பின்பு அவள் எவ்வாறு உள்ளாளோ என்று கவலையுறும் தாயையும் காணமுடிகிறது.*

**தொல்காப்பியத்தில் தாய் கூற்று**

*தொல்காப்பியப் பொருளதிகாரம் தமிழ் இலக்கியக் கோட்பாட்டினை எடுத்துரைக்கிறது. இதில் அகத்திணையியல் புறத்திணையியல் உள்ளிட்ட ஒன்பது இயல்களில் அகத்திணையியல்,*

*களவியல், கற்பியல், பொருளியல், செய்யுளியல் போன்ற இயல்களில் கூற்று பற்றி எடுத்துரைக்கின்றார். நற்றாய், செவிலி ஆகியோருக்கான கூற்றுக்கள் நிகழும் இடம் குறித்துக் கூறுவன. நற்றாய் கூற்றாக,*

***தன்னும் அவனும் அவளும் சுட்டி,***
***மன்னு நிமித்தம், மொழிப்பொருள் தெய்வம்***
***நம்மை தீமை அச்சம் சார்தல் என்று***
***அன்ன பிறவும் அவற்றொடு தொகைஇ***
***முன்னிய காலம் மூன்றுடன் விளக்கித்***
***தோழி தேஎத்தும் கண்டோர் பாங்கினும்***
***போகிய திறத்து நற்றாய் புலம்பலும்***
***ஆகிய கிளவியும் அவ்வழி உரிய (தொல்.அகத்திணையியல்.982)***

*என உடன்போக்கு நிகழ்ந்தப் பின் தலைவன் தலைவி நிலையை நிமித்தம் பார்த்தல், விரிச்சி கேட்டல், தெய்வத்தை வழிபடல், அவர்க்கு ஏற்படுகின்ற நன்மை தீமை பற்றிச் சிந்தித்தலால் ஏற்படும் அச்சம் அவரைச் சார்தல் போன்றவைகளை மூன்று காலங்கள் பற்றியும் விளக்கித் தோழியிடமும் கண்டோரிடமும் நற்றாய் கூற்றும் புலம்புதலும் நிகழும்.*

***யானும் தாயும் மடுப்ப, தேனொடு***
***தீம் பால் உண்ணாள் வீங்குவனள் விம்மி,***
***நெருநலும் அனையள்மன்னே இன்றே,***
***மை அணற் காளை பொய் புகலாக,***
***அருஞ் சுரம் இறந்தனள் என்ப - தன்***
***முருந்து ஏர் வெண் பல் முகிழ் நகை திறந்தே (நற்.179-5-10)***

*நற்றாயும் செவிலியும் தேனொடு கலந்த பாலைப் பருகுவாய் என்றதும் அழும் இயல்புடைய தலைவி, இன்று கருத்த தாடியும், காளையாகின்றவனின் பொய்ம்மொழிகளைப் பற்றுக் கோடாகக் கொண்டு வெண்மையான பற்களிலே சிரிப்பை வரவழைத்துக் கொண்டு நீங்கினாள் இவள் எவ்வாறு மனையறம் ஒழுகுவாள் என்று அஞ்சுவதோடு, எவ்வாறு ஆற்றியிருப்பேன் என்று நற்றாய் கூறுகிறாள்.*

**நற்றாய் கூற்றின் இயல்பு**

*நற்றாயின் கூற்று நிகழும் இயல்பு தலைவி, தலைவன் ஆகியோரிடம் நேர்ப்பட உரைத்தல் இல்லை. இதனை,*

***கிழவன் தன்னொடும் கிழத்தி தன்னொடும்***
***நற்றாய் கூறல் முற்றத் தோன்றாது (தொல்.செய்யுளியல்.1448)***

*எனத் தொல்காப்பியர் சுட்டுகிறார்.*

**கூற்றுவனைப் பழிக்கும் நற்றாய்**

*அவ்வாறு தலைவனுடன் உடன்போக்கு மேற்கொண்ட தலைவியை நினைந்து இல்லிலிருந்து புலம்புகிறாள் நற்றாய். கரிய எருமை அண்மையில் ஈனப்பட்ட பெரிய செவிகளையுடைய கன்று, புதிதாக மலர்ந்த மலர்களிலிருந்து உதிர்ந்த மகரந்தத்துகள் எருவாகக் கிடக்கும் தொழுவத்தில் தங்கித் துயில் கொள்ளும். அத்தகைய இனிய செழுமையுடைய இல்லத்தை விட்டு தலைவனுடன் சென்றுவிட்டாள். இப்படி மாலைநேரத்தில்*

*தேடும்படி நேரிட்டதினால் தன்னை உயிருடன் வைத்திருக்கும் கூற்றுவன் மீது மிகுந்த கோபம் கொள்கிறாள் நற்றாய்.*

***மாலை விரி நிலவில் பெயர்பு புறங்காண்டற்கு,***
***மா இருந் தாழி கவிப்ப,***
***தா இன்று கழிக, எற் கொள்ளாக் கூற்றே (நற்-271.10-12)***

*பாலை நிலத்தில் கிடக்கும் நெல்லியைத் தின்று, வறண்ட சுனையிலுள்ள சிறிய அளவிலான நீரைப் பருகி செல்லும் தலைவியை இம்மாலைப்பொழுதில் நிலவொளியில் சென்று தேடும்படியாயிற்று. இதற்கு முன்பே என்னைப் பெரிய கரிய தாழியிலிருத்திக் கவிக்கும்படி என்னுயிரைக் கூற்றுவன் கொண்டு செல்லவில்லையே. இனி அந்தக் கூற்றுவனும் வலியழிந்து இறந்து போகட்டும் என்கிறாள்.*

**செல்லும் இடங்கள்**

*தாய் உடன்போக்குச் சென்ற தலைவியைத் தேடும் இடங்கள் குறித்தும் தொல்காப்பியர் சுட்டுகிறார். பாதுகாப்பையுடைய பேரூர்களுக்கும், அதைச் சேர்ந்திருக்கின்ற சேரிகளுக்கும், காட்டு வழிகளுக்கும் செல்லும் நற்றாய், செவிலித் தாயரும் உள்ளனர்.*

**நற்றாயும் செவிலியும் தலைவியின் இயல்பைத் துணிதல்**

*தாய்க்குத்தான் தெரியும் பிள்ளையின் அருமை. தலைவியின் இயல்பை முழுவதுமாக அறிந்தவர்கள் நற்றாயும், செவிலித்தாயும் ஆவர். தலைவனை நம்பிச் சென்ற தலைவி தலைவன் இப்படிப்பட்டவன் என்று அறியும் இயல்பறியாள் என் செய்வது என்று,*

***கிழவோன் அறியா அறிவினள் இவள் என***
***மையறு சிறப்பின் உயர்ந்தோர் பாங்கின்***
***ஐயக்கிளவி அறிதலும் உரித்தே (தொல்.களவியல்.1063)***

*தாயர் இருவரும் குற்றமற்ற சிறப்பினையுடைய உயர்ந்தோரிடம் கேட்டுத் தம் ஐயத்தினைப் போக்கித் தெளிவாக அறிதலும் உண்டு என்கிறார்.*

*இவ்வாறு தலைவியைத் தலைவன் உடன்போக்கிற்குக் கொண்டு சென்றதை அறிந்த நற்றாய்,*

***பூங் கண் ஆயம் காண்தொறும், எம்போல்***
***பெரு விதுப்புறுகமாதோ - எம் இற்***
***பொம்மல் ஓதியைத் தன் மொழிக் கொளீஇ,***
***கொண்டு உடன் போக வலித்த***
***வன்கண் காளையை ஈன்ற தாயே (நற்.293)***

*தலைவியைப் பிரிந்து நான் துன்புறுவேன். யான் துன்பறுவது போல எனது இல்லத்தில் இருந்த பொலிவு பெற்ற கூந்தலைக் கொண்ட என் மகளைத் தன் சொற்களால் மயக்கித் தன் வயப்படுத்திக் கொண்டு தன் உடன் அழைத்துச் செல்லுதற்கும் எண்ணித் துணிந்த வன்கண்மை மிக்க காளைபோன்ற தலைவனைப் பெற்ற தாயும் அப்பெருந் துன்புறுவாளாக! என்றுரைக்கிறாள்.*

**செவிலியின் இயல்பு**

*நற்றாய் போல செவிலி தாய் என்று போற்றப்படுகிறாள். தலைவியைப் பேணிப் பாதுகாக்கும் கடமையுடையவளாக விளங்குகிறாள்.*

***ஆய்பெருஞ் சிறப்பின் அருமறை கிளத்தலின்***
***தாயெனப் படுவோள் செவிலியாகும் (தொல்.களவியல்.1070)***

*ஆராய்ந்து உணர்ந்து அரிய மறைப்பொருள்களை எல்லாம் குறிப்பால் அறிந்து கூறுபவள் செவிலியாதலால் தாய் என்று சிறப்பித்துக் கூறப்பெறுபவள் செவிலி ஆகும்.*

**தலைவன் இல்லில் மகிழ்ந்திருக்கும் தலைவி**

*தலைவனுடன் உடன்போக்குச் சென்ற தலைவி அவன் இல்லில் இன்பமுடன் இருப்பதைக் கண்டு செவிலித்தாய் நற்றாயிடம் கூறி மகிழ்கிறாள். தாம் ஈன்ற, வளர்த்த தலைவி தலைவன் இல்லில் மகிழ்வுடன் இருக்கின்றாள் என்று பார்ப்பது கேட்பது இருதாய் உள்ளங்களுக்கும் பெருமகிழ்ச்சி அளிக்கக்கூடியது.*

***முளிதயிர் பிசைந்த காந்தண் மெல்விரல்***
***கழுவுறு கலிங்கங் கழாஅ துடீஇக்***
***குவளை யுண்கண் யுய்ப்புகை கமழத்***
***தான்றுழந் தட்ட தீம்புளிப் பாகர்***
***இனிதெனக் கணவ னுண்டலின்***
***நுண்ணிதின் மகிழ்ந்தன றொண்ணுதன் முகனே (குறுந்தொகை.167)***

*இருப்பதைக் கொண்டு சிறப்புடன் தலைவனுக்கு உணவு கொடுக்கிறாள். பாகர்காயும் இனிது என்று தலைவன் உண்டான். தலைவி மகிழ்ச்சி பொலிவுடன் விளங்கினாள். அம்மகிழ்ச்சி மிகுதியாக வெளிப்படுத்தாமல் நுண்ணிதின் மகிழ்ந்தாள். தலைவி தற்கொண்டானைப் பேணுந் தகை சிறந்தாளென்பதைச் செவிலி உணர்த்தினாள் இதைவிட வேறென்ன பேறு வேண்டும் பெற்றவருக்கு என்கிறாள் செவிலித்தாய். பெற்ற மகள் புகுந்தவீட்டில் மகிழ்வுடன் இருக்க வேண்டும் அதுதான் தாய்க்கு மிக்க மகிழ்வு அளிக்கக்கூடியது. உடன்போகிய காலத்து தாய் வருந்தி இருந்ததும் அவள் எப்படி நடந்துகொள்வாளோ என்ற ஐயப்பாடும் காரணமாகியது.*

*அத்துடன் தலைவன் தலைவியை விட்டு சிறிதும் பிரிதல் இல்லை என்பதை,*
***கானங் கோழிக் கவர்குரற் சேவல்***
***ஒண்பொறி யெருத்திற் றண்சித ரறைப்பப்***
***புதனீர் வாரும் பூநாறு புறவிற்***
***சிறு ரோளே மட்தை வேறூர்***
***வேந்துவிடு தொழிலொடு செலினும்***
***சேந்துவர லறியாது செம்ம றேரே (குறுந் 242)***

*என்று கூறுகிறாள். தலைவனும் தலைவியும் இணைந்து வாழும் காட்சி இன்பமுடைத்தாய் உள்ளது. அவன் எங்குச் சென்றாலும் விரைந்து வந்து விடுகின்றான். வேந்தன் வேற்றுருக்கு அனுப்பினாலும் விரைந்து வினையை முடித்துக்கொண்டு அங்குத் தங்காது மனைக்கு வந்துவிடுகின்றான் என்று செவிலி நற்றாயிடம் உரைக்கிறாள். தலைவன் தலைவியுடன்*

*இல்லிலிருந்து மகிழ்வு கொண்டு வாழ்தலே பெருமகிழ்ச்சியாகும். பெற்ற தாயும் அதையே விரும்புகிறாள்.*

***முல்லைத்திணையில் செவிலிகூற்றுப் பத்தில்,***
***மறியிடைப் படுத்த மான்பிணை போலப்***
***புதல்வ னடுவண னாக நன்றும்***
***இனித மன்றவவர் கிடக்கை முனிவின்றி***
***நீனிற வியலகங் கவைஇய***
***ஈனு மும்பரும் பெறலருங் குரைத்தே (ஐங்குறுநூறு.401)***

*கலைமானும், பிணைமானுக்கும் இடையில் கன்று உறங்குவது போல, தலைவன் தலைவியின் இடையில் புதன்வன் நடுவினில் உள்ளக்காட்சி இன்பமுடைத்து என்கிறாள்.*

***புதல்வற் கவைஇய தாய்புற முயங்கி***
***நசையினன் வதிந்த கிடக்கை பாணர்***
***நரம்புளர் முரற்கை போல***
***இனிதா லம்ம பண்புமா ருடைத்தே (ஐங்குறுநூறு.402)***

*தலைவன் புதல்வனைத் தழுவும் வேளையில் தலைவியின் புறமுதுகை விருப்பமுடன் தடவிக்கொடுக்கிறான். இவ்வினிய காட்சியை யான் கண்டேன் என்று செவிலி நற்றாயிடம் உரைக்கிறாள். தலைவனும் தலைவியும் இன்பமுடன் வாழும் காட்சி செவியால் நற்றாய்க்கு கூறப்படுகிறது. மகள் நலமுடன் உள்ளாள் என்பது மேலும் மகிழ்வூட்டப்படுகிறது. இவ்வாறு நற்றாய் செவிலி வழி தலைவன் தலைவியின் இல்வாழ்க்கை இன்பமுடன் அமைவது கண்டு மகிழ்ச்சியடைகிறது.*

*அகத்திணைத் தோற்றம் சமுதாயவியல் மானிட நிலவியல் தொல் தமிழினத்தின் உளவியல் என்னும் முக்கூற்றுத் தன்மைகளைச் சார்ந்து நிற்பது (வ.சுப.மாணிக்கம், தமிழ்க்காதல், ப.93) எனும் கூற்றிற்கிணங்க சங்க அகப்பாடல்களில் தாய்மை என்னும் உணர்வு திணை அடிப்படையில் நிலம் சார்ந்த கருபொருள் வழி நற்றாய் செவிலியின் உளப்பாங்கு ஆராயப்பட்டன.*

**முடிவுரை**

1. *சங்க அகப்பாடல்களில் தாய்மை என்னும் இக்கட்டுரையின் வழி பெறப்படுவன*
2. *சங்க அகப்பாடல்களில் தலைவன் தலைவி அன்பின் வெளிப்பாடான களவு வாழ்க்கையில் தலைவியின் உடல் வேறுபாட்டை அறியும் தாய் அவளுக்கு வெறியாட்டு நிகழ்த்தி, இற்செறிப்பு செய்கிறாள்.*
3. *இற்செறிப்பால் தலைவனைச் சந்திக்க முடியாமல் தலைவி துன்பப்படுகிறாள். இதனால் தோழியும் வருந்துகிறாள். காரணமாகும் தாயை நன்னன் போல் நரகம் புக வேண்டும் என்று வெறுப்புணர்வு கொள்கின்றனர்.*
4. *களவு கற்பாக மாற உடன்போக்கு நிகழ்கிறது. இதனால் தாய் உள்ளம் தவிக்கிறது. தலைவி தலைவனுடன் செல்ல துணிந்த திறமும், கடந்து செல்லும் பாதையின் ஏதம் குறித்தும் வருந்துகிறாள் நற்றாய்.*

5. தலைவியை அழைத்துச்சென்று, ஈன்ற தான் இவ்வளவு துன்பத்துக்கு ஆளாகும்படி கூற்றுவன் என்னை விட்டு வைத்துள்ளான். அவன் இறந்தபட வேண்டும் என்று கூறுகிறாள்.
6. தலைவனுடன் சென்ற தலைவியை நினைந்து நாம் துன்புறுவதுபோல், தலைவன் தாயும் துன்பமடைய வேண்டும் என்கிறாள்.
7. செவிலித்தாய் தலைவி தலைவனுடைய இல்லில் மகிழ்வுடன் இருக்கின்றாள் என்ற செய்தியைச் சொல்லி மகிழ்கிறாள்.
8. தலைவனுக்கு உணவு செய்து கொடுத்தல். தலைவன், தலைவி புதல்வனுடன் அன்பு கொண்டு வாழும் காட்சி அனைத்தும் மகிழ்வுடையதாகின்றது என்கிறாள்.
9. இவ்வாறு தாயானவள் தலைவி தலைவனுடன் இன்பமுடன் இருக்க வேண்டும் என்பதற்காகவே கோபம் கொள்கிறாள். இன்பமுடன் இருக்கிறாள் என்றபோது மகிழ்வடைகின்றாள். இதுதான் தாய்மை உள்ளம் என்பது இக்கட்டுரை வழி வெளிப்படுத்தப்பட்டது.

**பார்வை நூல்கள்**


1. சாமிநாதையர் டாக்டர் உ.வே. குறுந்தொகை மூலமும் உரையும், டாக்டர் உ.வே.சாமி நாதையர் நூல் நிலையம், சென்னை - 600 090. எட்டாம் பதிப்பு - 2020.
2. சுப்பிரமணியன் முனைவர் ச.வே. தொல்காப்பியம் தெளிவுரை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 600108. ஆறாம் பதிப்பு நவம்பர், 2003.
3. மாணிக்கம், வ.சுப. தமிழ்க்காதல், மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம் - 608 001. முதற்பதிப்பு: மே, 2002.
4. வேங்கடராமன் வித்துவான் டாக்டர் ஹெச். (பதி) நற்றிணை மூலமும் உரையும், உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை - 600 090. எட்டாம் பதிப்பு - 2020.


## References


1. *Saminathaiyar Dr. U.Ve. Kurunthogai Moolamum Uraium, Dr U.Ve. Saminathaiyar Nool Nilayam, Chennai – 600 090. 8th Edition – 2020.*
2. *Subiramaniyan Dr. S.V. Tholkappiyam Thelivurai, Manivasagar Publications, Chennai – 600 108. 6th Edition -2003.*
3. *Manikkam, Vaa.Suba. Thamizhkkathal, Meiyappan Thamizhaivagam, Chidambaram – 608 001. First Edition: May, 2002.*
4. *Venkkataraman Vithvan Dr H. (Publisher) Nattrinai Moolamum Uraiyum, Dr U.Ve. Saminathaiyar Nool Nilayam, Chennai – 600 090. 8th Edition – 2020.*